# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-12 | Date | : 10.12.2024 |
| Case No. | : **O.S.492/2019** | Nationality | : Indian |
| Name | : சிவசுப்ரமணியன் | Religion | : |
| Father's/Husband's Name | : சீனிவாசன் | Age | : 46 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.12</u>

சாட்சி சத்திய பிரமாமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் தேவாங்கர் தெரு, துகிலியில் வசித்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெற்ற பிறகு நான் யாரை சந்தித்தேன் என்றால் நான் யாரையும் சந்திக்கவில்லை. நான் நேரடியாக நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். தற்போதுதான் நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எங்கு வைத்து எப்போது சொன்னேன் என்றால் நான் நீதிமன்றத்திற்கு காலை 10.30 மணிக்கு வந்த பிறகு வழக்கறிஞர் எம்.பி. மனோகரன் அவர்களிடம் போன் மூலமாக தகவல் சொன்னேன். அவ்வாறு வழக்கறிஞர் தட்டச்சு செய்து எடுத்து வந்ததில் நான்

கையொப்பம் செய்தேன் என்றால் நான் சொன்ன விவரத்தை தட்டச்சு செய்து எடுத்து வந்தார் அதில் நான் கையொப்பம் செய்தேன். நான் போன் மூலமாக நிருபண வாக்குமூலத்திற்கு விவரம் சொன்ன விவரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. வாதி என்னென்ன சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரணத்தில் கரும்பு சாகுபடி செய்யும் விவரம் தெரியுமா என்றால் வயலை தெரியும் சாகுபடி செய்வது தெரியும். சர்வே எண் விஸ்தீரணம் தெரியாது. எத்தனை எத்தனை குழிகளில் என்னென்ன சாகுபடி செய்கிறார் என்று தெரியாது என்றால் சரிதான். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சர்வே எண்களில் கண்ட சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் ஆரிப் என்பவரின் மனைவி பெயரில் உள்ளது. அவரது மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக ஒரு சொத்தை பொறுத்து சொத்தில் உரிமையில்லாத நபர் குத்தகை ஆவணம் எழுதிக் கொடுக்கமுடியாது என்றால் சரிதான். பொது அதிகார ஆவணம் இருந்தார் எழுதி கொடுக்கலாம். பொது அதிகார ஆவணத்தில் குத்தகை ஆவணம் எழுதி கொடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால்தான் எழுதி கொடுக்க முடியும் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் வாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2024.12.10 19:05:25 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.